Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 2

## வேள்பாரி புதினத்தில் சங்க இலக்கிய செய்திகள்

*ம. இந்துஜா பிருந்தா [1] , நெறியாளர் : தா. ஷமிலா ஜோஸ்டர் [2]*
*[1]முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*[2]தமிழ்த்துறை,*
*தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி),*
*பாளையங்கோட்டை . 627 002.*

## *முன்னுரை*

இலக்கியங்கள் சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரை பல வகைகளில் அமைந்துள்ளன. இவ்வகைகளுள் ஒரு இலக்கிய வகையின் கூறுகள் மற்ற இலக்கிய வகைகளுக்குள் அமைந்து வருதலும் உண்டு. இவ்வாறு சங்க இலக்கியத்தின் கூறுகள் சமகால இலக்கியத்திற்குள் அமைந்துவந்துள்ளன என்பதற்குச் சான்றாக சு. வெங்கடேசன் அவர்கள் எழுதிய 'வீரயுக நாயகன் வேள்பாரி' புதினத்தைக் குறிப்பிடலாம். புதினத்தில் இடம்பெற்றுள்ள சங்க இலக்கிய செய்திகளை ஆராய்வதன்வழி, சங்க இலக்கியம் சமகால இலக்கியத்தோடு பாடுபொருளில் தொடர்புடையதாக அமைந்துள்ளது என்பதை உணரமுடிகிறது.

## கதைச்சுருக்கம்

**இயற்கை வளம் கொண்ட பறம்பு மலையையும், கருணை உள்ளத்தினையும் உடையவனாக வள்ளல்பாரி இருக்கின்றான். பாரியின் பறம்பு மலை மூவேந்தர்களால் அழிக்கப்பட்ட பல்வேறு குலங்களுக்கு அடைக்கலமாக இருக்கிறது. பறம்பின் இயற்கை வளமும் பாரியின் புகழும் மூவேந்தர்களுக்கு பாரியின்மீது பொறாமை தோன்றக் காரணமாக இருக்கின்றன. மூவேந்தர்கள் ஒன்றிணைந்து பாரியை எதிர்க்கும் நிலையில், போர் உத்தி மற்றும் பறம்பின் இயற்கை ஆற்றல் வழியே பாரி மூவேந்தர்களை வெற்றிபெறுவதாக அமைந்துள்ளது வேள்பாரி புதினம் ஆகும்.**

## பாரி-கபிலர் நட்புத்திறம்

வேள்பாரி புதினத்தில், கபிலரை காணும் முன்பே 'எழுத்தறிவு கற்ற பெரும்புலவர்' என்று கபிலர் மீது மரியாதை கொண்டவனாக பாரி காட்சிப்படுத்தப்பட்டுள்ளான். பாரியின் கருணையின் அளவினை அறிந்துகொள்ளும் பொருட்டு பறம்பு மலையினை நோக்கி கபிலர் பயணப்படுகிறார். பாரியை பற்றி கபிலர் அறியும் கதையே வேள்பாரி புதினத்தின் கதையாகும்.

**"இவ்வளவு தாக்குதல்களையும் வலியையும் தாங்கியபடி மலைகள் கடந்து வந்திருக்கிறீர்களே, இனியாவது உங்களை எனது தோளிலே தூக்கிச்செல்ல அனுமதிப்பீர்களா?"**

**திகைப்பிலிருந்து மீளாத கபிலர், நெருங்கிவரும் அந்த மாமனிதனைப் பார்த்துக் கேட்டார், "நீங்கள் யார்?"**

"வேள்பாரி!"[1]

பாரியை முன்பு பார்த்தறியாத கபிலர் பாரியை முதன்முதலில் சந்திக்கும் நிகழ்வு மேற்கண்ட உரையாடலின்வழி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**கபிலர் பாரியிடையே இருந்த மரியாதை என்ற உணர்வு விரைவிலேயே நட்பாக மாறியது. உப்பறைக்கு பாரி செல்லும்போது, கபிலரிடம் நீலன் மயிலாவின் மணவிழாவிற்கான பணியில் உடன்படுகிறீர்களா? அல்லது பாரியுடன் உப்பறைக்கு சென்று வருகிறீர்களா? என்று தேக்கன் கேட்கும்போது அங்கே நடைபெறும் உரையாடல் நகைச்சுவை உணர்வோடு கபிலர் பாரியின் நட்புத்திறத்தினை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.**

கபிலர் பாரி பற்றி பாடிய சங்க இலக்கிய பாடல்களில், பறம்பு மலையின் வளமும், பாரியின் கொடைத்திறமும் வெளிப்படுகிறது. பாரி இறந்த பின்பு

பாரியின் மகளிரை காக்கும் பொறுப்பினை ஏற்ற கபிலர் பாரியின் பிரிவினால் வாடுவதை பல பாடல்களில் காணமுடிகிறது.

> "இரும்பல் கூந்தல் மடந்தையர் தந்தை
>
> ……… ……… ……… ………
>
> செருவெஞ் சேஎய் பெருவிறல் நாடே!"[2]

மேற்கண்ட புறநானூற்று பாடல், கபிலர் பாரியின் இறப்பிற்கு பிறகு பறம்பு மலையின் வளம் இனிக்கெட்டுவிடுமோ? என்று வருந்தி கையறுநிலையில் பாடியதாகும்.

## பாரி மகளிர்

**வேள்பாரி புதினத்தில், பாரியின் மூத்த மகள் அங்கவை வீரம் மிகுந்த இளம்பெண்ணாகவும், இளைய மகள் சங்கவை சிறுமியாகவும் படைக்கப்பட்டுள்ளனர். பாரி மகளிர் இருவரும் கபிலரிடம் எழுத்தறிவு கற்கின்றனர். பெண்கள் ஆண்களைவிட அதிக மனவலிமை உடையவர்கள் என்பதோடு, ஆண்களுக்கு நிகரான உடல்வலிமையை உடையவர்கள் என்பதற்குச் சான்றாக அங்கவை பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. தன் காதலன் உதிரனை சோழப் படையின் கண்களில்படாமல் பாதுகாக்க அவள் எடுத்துக்கொண்ட முயற்சி அங்கவையின் மனவலிமையையும், உடல்வலிமையையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றது.**

சங்கவை குறும்புத்தனம் உடைய சிறுமியாகவும், விளையாட்டுப் பெண்ணாகவும் வேள்பாரி புதினத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளாள்.

"அவள் இடப்புறமாகத் திரும்பிக் கபிலரைப் பார்த்து புன்முறுவலோடு அவரின் தாடியைச் சட்டென வருடிவிட்டபடிக் கூத்துக் களத்தைப் பார்த்துத் திரும்பிவிட்டாள்.

நீண்ட நேரமாக உணர்ச்சிக் கொந்தளிப்பிலிருந்த கபிலரின் முகம் சற்றே மாறத் தொடங்கியது. சங்கவையின் சிறுகுறும்பு அவரின் மனநிலையை மாற்றத் தலைப்பட்டது"[4]

என்ற வரிகள் கபிலரின் மன உணர்வுகளுக்கிடையே சங்கவையின் குழந்தைத்தன்மையையும் புலப்படுத்துகின்றன.

சங்க இலக்கியத்தில் பாரி மகளிர் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. பாரி மகளிரின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. கபிலர் பாரி மகளிரை அரவணைத்த செய்தியும், பாரி மகளிர் தம் தந்தையை இழந்த நிலையும் சங்க இலக்கியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

## மூவேந்தர் படையெடுப்பு

சேர, சோழ, பாண்டியர் மூவரும் இணைந்து பாரியை எதிர்த்து படையெடுத்து வரும்நிலையில் அவர்களை பாரி தனது பறம்பு வீரர்களோடு இணைந்து பல்வேறு உத்திகளை பயன்படுத்தி எதிர்கொள்கிறான். மூவேந்தர்கள் அறம்பிறழும் நிலையில் பாரி அழித்தொழிக்கும் திட்டத்தை நிகழ்த்துகிறான். மூவேந்தர்களுடன் போரிட்டு பாரி வெற்றி பெறும் நற்செய்தியோடு வேள்பாரி புதினம் முற்றுபெறுகிறது. ஆனால், சங்க இலக்கியத்தில் மூவேந்தர்கள் பறம்பு மலையை முற்றுகையிட்ட நிலையிலும் பாரியை வெற்றி கொள்ள இயலாததால், வஞ்சனையால் பாரியை கொன்ற செய்தியும், அதன்பின் பாரிமகளிரை கபிலர் அரவணைத்த செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

> "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்
>
> ……….. ……… …………. …………
>
> குன்றும் கொண்டார்யாம், எந்தையும் இலமே"[5]

பாரி மகளிரின் இப்பாடல் அவர்களின் மனத்துயரை வெளிப்படுத்துவதோடு, மூவேந்தர்களை இகழ்ச்சி தோன்றக் கூறுவதாகவும் அமைந்துள்ளது

பாரியின் வள்ளல் தன்மை:

வேள்பாரி புதினத்தில் பல அறிவியல் மற்றும் மருத்துவ செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் கொல்லிக்காட்டு விதையின் பயன்பாடும் ஒன்று.

> "இது கொல்லிக்காட்டு விதை. காக்காய்க் கொல்லி விதை என்றும் சொல்லுவோம். அதை மீன்களும் பறவைகளும் விரும்பித் தின்னும். பிறகு சிறிது நேரத்திலேயே மயக்கம் அடைந்துவிடும் என்றான்."[6]

மேற்கண்ட வரிகள் கொல்லிக்காட்டு விதையின் செயல்திறனை வெளிப்படுத்துகின்றன. இவ்விதை பறம்பில் மட்டுமே கிடைப்பது. பறம்பின் குடிமக்களை தவிர வேறு யாருக்கும் தெரியாதது. இதனை வேறு குலத்திற்கு கொடுக்கக்கூடாது என்பது பறம்பின் குலநாகினியின் வாக்கு.

ஒரு சமயம் மதங்கன் கூட்டம் பாரியை காண வரும்போது பறம்பின் வீரன் ஒருவன் அவர்களை வழிப்படுத்தி பாரியிடம் அழைத்துச் சென்றான். அப்பொழுது, கொல்லிக்காட்டு விதையை பயன்படுத்தி மதங்கன் கூட்டத்தின் பசியினை நீக்கினான். கொல்லிக்காட்டு விதையின் பயன்பாட்டினை அறிந்த மதங்கன் கூட்டம் கூத்து நிகழ்த்திய பின்பு பாரியிடம் கொல்லிக்காட்டு

விதையினை பரிசாக கேட்டது. பாரி அதனை பலர் எதிர்த்த நிலையிலும் அவர்களுக்கு கைநிறைய கொடுத்து அனுப்பினான். இச்செய்தியின் வழி, இரந்து வருபவர்களுக்கு குறையாது கொடுக்கும் பாரியின் வள்ளல் தன்மை வெளிப்படுகிறது

சங்க இலக்கியத்தில் பாரி வள்ளல் தன்மை கொண்டே அடையாளப்படுத்தப்பட்டுள்ளான். பாரி கடையெழு வள்ளல்களில் ஒருவன் என்றும், முல்லைக்கொடிக்காக தனது தேரினை கொடுத்தவன் என்றும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> “சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
>
> ............ ............ .......... .........
>
> பறம்பின் கோமான் பாரி”[7]

என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் வரிகள் பாரியின் கொடைத் தன்மையை புலப்படுத்துகின்றன.

## முடிவுரை

சங்க இலக்கிய சாயலை மையமாகக் கொண்டு அமைந்துள்ள வீரயுக நாயகன் வேள்பாரி என்ற புதினம் பாரி என்ற வள்ளலுக்கு ஒரு வடிவத்தையே கொடுத்துள்ளது. இப்புதினத்தில் ஒவ்வொரு பாத்திரத்தின் வழியும் அகப்புற வாழ்வு அழகுற வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பண்டைய கால மக்களின் வாழ்வியலையும், இனக்குழு சமுதாயம் வேந்தர் சமுதாயமாக மாறும் சமுதாய முறைகளையும் வெளிப்படுத்தியுள்ளது. இத்தகைய சமகால இலக்கியமான வேள்பாரி புதினத்தில் இடம்பெற்றுள்ள சங்க இலக்கிய பாடுபொருள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டு அதன்வழி, இவ்விலக்கியங்களுக்கு இடையே உள்ள தொடர்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

- சங்க இலக்கியத்திற்கும் சமகால இலக்கியத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை ஆராயும் வகையில் வேள்பாரி புதினமும் சங்க இலக்கியமும் ஒப்பிடப்படுகிறது என்பதையே முன்னுரை குறிப்பிட்டுள்ளது.
- அடுத்ததாக, வேள்பாரி புதினத்தின் கதைச்சுருக்கம் அமைகிறது.
- அதனை தொடர்ந்து, வேள்பாரி புதினத்தில் இடம்பெறும் சங்க இலக்கிய பாடுபொருள்களான பாரி-கபிலர் நட்புத்திறம், பாரி மகளிர் பற்றிய செய்திகள், மூவேந்தர்கள் படையெடுத்து பாரியை எதிர்த்தல் மற்றும்

பாரியின் வள்ளல் தன்மை ஆகியவை முறையே வரிசையாக உட்தலைப்புகளாக கொடுக்கப்பட்டு அவை பற்றி வேள்பாரி புதினம் மற்றும் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் கருத்துக்கள் இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- இறுதியாக சமகால இலக்கியமாகிய புதினத்தின் பாடுபொருளுக்கும் சங்க இலக்கித்திற்கும் தொடர்புள்ளது என்று முடிவுரையில் கூறப்பட்டுள்ளது.

## குறிப்புகள்

1. வீரயுக நாயகன் வேள்பாரி, முதல் தொகுதி, பக்கம். 87.,
2. புறம், பாடல் எண். 120: 17-21.,
3. வீரயுக நாயகன் வேள்பாரி, முதல் தொகுதி, பக்கம். 298.,
4. வீரயுக நாயகன் வேள்பாரி, இரண்டாம் தொகுதி, பக்கம். 795.,
5. புறம், பாடல் எண். 112: 1-5.,
6. வீரயுக நாயகன் வேள்பாரி, முதல் தொகுதி, பக்கம். 107.,
7. சிறுபா. பாடல் வரிகள். 89-91.,

## துணைநூற்பட்டியல்

1. சுப்பிரமணியன். ச.வே., (உ. ஆ) - பத்துப்பாட்டு,
கலாக்ஷேத்திரா அச்சகம், சென்னை - 41,
முதற்பதிப்பு - அக், 2003.
2. புலியூர்க்கேசிகன்., (உ.ஆ), - புறநானூறு,
பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை -1,
விரிவாக்கிய புதிய பதிப்பு - 1977.
3. வெங்கடேசன். சு., - வீரயுக நாயகன் வேள்பாரி,
விகடன் பிரசுரம்,
757, அண்ணா சாலை, சென்னை - 600 002,
ஆறாம் பதிப்பு - ஜுன், 2021.